# அமானா ராக்யாட் 1 மலேசியா திட்டம்
# (சாரா 1 மலேசியா)

குறைந்த வருமானத்தைக் கொண்ட மலேசிய மக்கள், சேமிப்பு மற்றும் முதலீடு வழி தங்களின் வருமானத்தை உயர்த்துவதோடு, நாளுக்கு நாள் அதிகரித்துக் கொண்டுபோகும் வாழ்க்கை செலவை சமாளிக்கவும் , நிதி அமைச்சின் கீழ் மலேசிய அரசாங்கத்தால் உருவாக்கப்பட்ட சிறப்பு திட்டம் சாரா 1 மலேசியா.
இத்திட்டத்தின் வழி தகுதியுடைய மலேசிய மக்கள் அமானா சாஹாம் 1 மலேசியா (AS 1M) * பங்கு திட்டத்தில் முதலீடு செய்ய ரிங்கிட் மலேசியா RM 5,000 கடந்தொகையை பெற்றுக்கொள்ள விண்ணப்பம் செய்யலாம். இந்த திட்டம் பெர்மொடாலான் நேஷனல் பெர்ஹாட் (PNB) மற்றும் சம்பந்தப்பட்ட நிதி நிறுவனங்களின் ஆதரவோடு நிருவப்படும். மொத்தம் RM 500 மில்லியன் மதிப்புள்ள இந்த கடன் தொகை 100,000 குடும்பங்களுக்கு வழங்கப்படுகிறது.

* பூமிபுத்ரா 50%, சீனர்கள் 30%, இந்தியர்கள் 15% மற்ற இனங்கள் 5% என வகுக்கப்பட்டிருக்கும் அமானா சஹாம் 1 மலேசியா பங்குகளுக்கேற்ப விநியோகம் செய்யப்படும்.

**விண்ணப்ப விதிமுறைகள்**

1. 16 - 58 வயதுக்குட்பட்ட மலேசிய பிரஜையாக இருத்தல் வேண்டும்
2. RM500 - RM3000-க்குள் மொத்த குடும்ப வருமானம் இருத்தல் வேண்டும்
3. கடனுதவி காலத்தின் போது விண்ணப்பம் செய்பவர் திவால் நிலையில் இல்லாமல் இருத்தல் அவசியம்
4. விண்ணப்பத்தாரர் மற்றும்/அல்லது அவரது கணவன்/மனைவி Program Rakyat Termiskin (PPRT), ASB-Sejahtera மற்றும் ASW2020 - Bandar போன்ற அமானா சஹாம் நேஷனல் பெர்ஹாட் (ASNB) -டின் கீழ் நிருவப்பட்ட அரசாங்க திட்டங்களில் பங்குபெறாமல் இருத்தல் வேண்டும்.
5. விண்ணப்பத்தாரர் மற்றும்/அல்லது அவரது கணவன்/மனைவி ASNB -யில் எந்த வித முதலீடும் செய்யாமல் இருத்தல் வேண்டும் அல்லது அவ்வாறு செய்திருந்தால் மொத்த முதலீடு RM10,000 அல்லது அதற்கு குறைவானதாக இருத்தல் வேண்டும்.
6. ஒரு குடும்பம் ஒரு விண்ணப்பத்தை மட்டுமே அனுப்பலாம்.
7. விண்ணப்பத்தின் முடிவு சம்பந்தப்பட்ட நிதி நிறுவனங்களில் விதிமுறைகளுக்கு உட்பட்டது.

**30 ஜனவரி 2012 முதல் விண்ணப்பம் செய்யலாம்**

**மேல் விபரங்களுக்கு :** **03-2057 3065**
**saracare@sara1malaysia.com.my**
**www.sara1malaysia.com.my**

Maybank CIMB BANK RHB BSN

தமிழாக்கம் Yayasan Strategik Sosial
சமூக வியூக அறவாரியம்
*touching hearts*

## விண்ணப்பங்களுக்கான ஆவணங்கள்

| எண் | விண்ணப்பத்தோடு இணைக்க வேண்டிய ஆவணங்கள் | திருமணமானவர் | தனித்து வாழும் தந்தை / தாய் |
|---|---|---|---|
| 1. | அடையாள அட்டையின் நகல்<br>i. விண்ணப்பத்தாரர்<br>ii. கணவன்/ மனைவி | 2 நகல்<br>1 நகல் | 2 நகல் |
| 2. | விண்ணப்பத்தாரரின் பராமரிப்பில் இருப்பவர்களின் அடையாள அட்டை / பிறப்பு பத்திரம் | - | 1 நகல் |
| 3. | வருமான உறுதிச் சான்றிதழ்<br>a. (i) வேலை செய்யும் விண்ணப்பத்தாரர்<br>(ii) கணவன்/மனைவி<br>- ஆவணங்கள் பணிபுரியும் நிறுவனத்தின் உயர் அதிகாரியால் உறுதிப்படுத்தப்பட்டிருக்க வேண்டும் | 3 மாத வருமான விபரம்<br>3 மாத வருமான விபரம் | 3 மாத வருமான விபரம்<br>3 மாத வருமான விபரம் |
| | b. சுயதொழில் செய்யும் விண்ணப்பத்தாரர்கள்<br>-ஆவணங்கள் சாட்சிகளால் உறுதிப்படுத்த பட்டிருக்க வேண்டும் | சாரா 1 மலேசியா விண்ணப்பத்தினலுள்ள வருமான விபரம் | சாரா 1 மலேசியா விண்ணப்பத்தினலுள்ள வருமான விபரம் |
| 4. | AS 1 M** முதலீட்டு புத்தகம் (முதல் பக்க நகல்)<br>-பதிவுசெய்த முதலீட்டாளர்கள் மட்டும் | | |

**குறிப்பு**

1. அனைத்து ஆவணங்களும் நிதி நிறுவனங்களால் பரிசீலிக்கப்படும். எனவே அசல் ஆவணங்களையும் கொண்டுவர வேண்டும்.
2. அனுமதிக்கப்பட்ட சாட்சியாளர்கள் : பணிபுரியும் நிறுவனத்தின் உயர் அதிகாரி/ குடியிருப்புத் தலைவர்கள்/ பூர்வ குடியிருப்பு மேம்பாட்டு துறையின் அதிகாரிகள்/ நிர்வாகம் மற்றும் தொழில்முறை சார்ந்த அதிகாரிகள்/ சட்டமன்ற உறுப்பினர்/ நாடாளுமன்ற உறுப்பினர்.

| கடனுதவி | காலவரை | மாத கட்டணம் | மாத லாபப்பங்கு |
|---|---|---|---|
| **RM 5000** | **5 வருடம்** | **RM84** | **RM 134** |

தமிழாக்கம் Yayasan Strategik Sosial
சமூக வியூக அறவாரியம்
*touching hearts*